# அரசகரும மொழிகள் கொள்கை

## 1. அறிமுகம்

அரசகரும மொழிக் கொள்கை எனப் பொருள்படுவது, ஏதேனும் ஒரு நாட்டின் அரசகரும மொழி அல்லது அரசகரும மொழிகள் தொடர்பில் பின்பற்றப்படுகின்ற கொள்கையாகும். மொழிப் பயன்பாடு, அவற்றின் மேம்பாடு மற்றும் அபிவிருத்தி தொடர்பில் அரசாங்கத்தால் மேற்கொள்கின்ற தீர்மானங்கள் அரசகரும மொழிகள் ஊடாகவே வெளியிடப்படுகின்றன. பன்மொழி சமூகத்தில் அமைதியையும் நல்லிணக்கத்தையும் உருவாக்குவதற்கு அரசகரும மொழிக்கொள்கை மிகவும் இன்றியமையாததாகும். அதன்மூலம் பிரஜைகளின் மொழி பயன்பாட்டுக்கான வசதிகளை அளித்தல் மற்றும் பிரஜைகளின் மொழி உரிமைகளைப் பாதுகாத்தல் போன்றே கலாச்சார ரீதியான ஒற்றுமைக்கும் வழிவகுக்கின்றது.

உலகின் பல்வேறு நாடுகள் தமது பிரஜைகளின் மொழிப் பயன்பாடு மற்றும் மொழி உரிமைகளைப் பாதுகாப்பதற்காக பல்வகையிலான கொள்கைகளைப் பின்பற்றுகின்றன. இலங்கைப் போன்று பிரித்தானியாவின் காலனித்துவ நாடாக இருந்த கனடாவில் அரசகரும மொழிகளாக ஆங்கிலம் மற்றும் பிரேஞ்சு என்று பிரகடனப்படுத்தியுள்ளதுடன், அனைத்து அரச நிறுவனங்கள் மற்றும் பாராளுமன்றத்தில் குறித்த இரண்டு மொழிகளுக்கும் சமஅந்தஸ்த்து வழங்கப்பட்டுள்ளது. சுவிட்சர்லாந்தில ஜெர்மன், பிரேஞ்சு, இத்தாலி மற்றும் ரொமான்ஸ் ஆகிய நான்கு மொழிகளும் அரசகரும மொழிகளாகும். தென் ஆபிரிக்காவில் அண்ணளவாக 25 மொழிகள் பயன்படுத்துவதுடன், அதில் 11 மொழிகள் அரசகரும மொழிகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. பொலீவியாவில் 37 அரசகரும மொழிகள் பயன்படுத்துவதுடன் உலகத்தில் அதிகமான அரசகரும மொழிகள் பயன்படுத்தும் நாடாக கின்னஸ் புத்தகத்திலும் பதிவாகியுள்ளது. சில நாடுகள் அரசகரும மொழிகளாக எந்தவொரு மொழியும் பிரகடனப்படுத்தப்படவில்லை. அவுஸ்த்ரேலியா, எரித்திரியாவ, லக்சம்பர்க், சுவீடன் மற்றும் டுவாலு ஆகிய நாடுகளில் எந்தவொரு மொழிக்கும் அரசகரும மொழிக்கான அந்தஸ்த்து வழங்கப்படவில்லை.

இலங்கையில் அரசகரும மொழிகளாக சிங்களம் மற்றும் தமிழ் பிரகடனப்படுத்தியுள்ளதுடன், குறித்த மொழிகள் தேசிய மொழிகளாகவும் அறிவிக்கப்பட்டுள்ளன.

## 2. பிரித்தானியா காலனித்துவ காலத்தில் இலங்கையில் மொழி பயன்பாடு

இலங்கையில் அரசகரும மொழிக் கொள்கையானது, பிரித்தானியாவின் காலனித்துவ காலம் தொடக்கம் முறையாக வளர்ச்சியடைந்து வந்துள்ளமையை அவதானிக்கலாம். இலங்கையின் கரையோரப் பகுதிகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்த போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தர்கள் ஆகியோருக்கு தமது மொழிகளை இலங்கையில் பரப்புவதற்கு வாய்ப்பு கிடைக்கப்பெறவில்லை. 1796 இல் ஒல்லாந்தர்களை விரட்டியடித்து ஆங்கிலேயர்கள் அந்தப் பிரதேசங்களில் ஆட்சியைக்

கைப்பற்றிய பின்னர், அவர்கள் ஆங்கில மொழியின் அவசியத்தை வலியுறுத்தினார்கள். அதன்போது ஆளுநர் பதவி வகித்த பெட்ரிக் நோர்த் ஆங்கில மொழியை அடிப்படையாகக்கொண்ட மொழிக் கொள்கை அறிமுகப்படுத்தவதற்கு நடவடிக்கை மேற்கொண்டார். ஆயினும் மொழிக் கொள்கை அதிகாரப்பூர்வமாக 1832 ஆம் ஆண்டு கோல்புரூக் அறிக்கை மூலமே அறிவிக்கப்பட்டது. அதன் விளைவாக அரசாங்க நிருவாகம், கல்வி போன்றே நீதித்துறையின் மொழியாக, ஆங்கில மொழி பயன்படுத்துவதை ஊக்குவிப்பதற்கு ஆங்கிலேயர்களின் அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. ஆங்கில மொழிமூலம் பாடசாலைகள் ஆரம்பித்தலானது அதன் ஒரு விளைவு ஆகும். ஆயினும், தாய்மொழி தொடர்பான புரிதல் இல்லாமை ஆங்கிலேயர்களுக்கு சாதகமற்ற சூழ்நிலையை உருவாக்கியது. ஆகையால் அனைத்து அரச ஊழியர்களும் தமது பதவி உயர்வுகளின் பொருட்டு சிங்களம் மற்றும் போர்த்துக்கேய மொழி தொடர்பான தேர்ச்சி பெறுதல் கட்டாயமாக்கப்பட்டு ஒழுங்குவிதிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. ஆயினும் தமிழ் மொழி தேர்ச்சி தொடர்பாக கவனம் செலுத்தப்படவில்லை. 1824 ஆம் ஆண்டில் போர்த்துக்கேய மொழியும் கைவிடப்பட்டதுடன், சனத்தொகையில் அதிகமானோருக்கு ஆங்கில மொழி தேர்ச்சி இல்லாமை காரணமாக நிருவாக நடவடிக்கைகளின் போது சிறிய அளவில் சிங்கள மொழியும் பயன்படுத்தப்பட்டது. உதாரணமாக அரசாங்கத்தின் கட்டளைச் சட்டங்கள் ஆங்கில மொழியல் தயாரிக்கப்பட்டதுடன், அவற்றை சிங்கள மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டது. நிருவாகத்தின் வசதி கருதி இலங்கை 09 மாகணங்களாக பிரிக்கப்பட்டதுடன், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழி பேசுகின்ற பிரதேசங்களாகவும், ஏனைய அனைத்து பிரதேசங்களும் சிங்கள மொழி பயன்படுத்தகின்ற பிரதேசங்களாகவும் பெயரிடப்பட்டது. ஆங்கில மொழி தேர்ச்சி இல்லாத எந்தவொரு தாய்மொழி பேசுபவரும் கிராமத்தலைவர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்ய இயலாதென 1828 ஆம் ஆண்டு ஒழுங்குவிதிகள் விதிக்கப்பட்டதுடன், சிவில் சேவையின் தரமுயர்வுகளுக்காக சிங்களம் மற்றும் தமிழ் மொழித் தேர்ச்சி வலியுறுத்தப்பட்டது.

எவ்வாறாயினும், தாய்மொழி கற்றல் மற்றும் பயன்பாடு தொடர்பாக பெரும்பாலான ஆங்கிலேயர்களால் கவனியாது விடப்பட்டது. ஆகையால் அவர்கள் தமக்கு மிக நம்பகரமான சில நபர்களை மட்டும் தாய்மொழி பேசுபவர்களுடன் தொடர்பாடல் நடவடிக்கைகளின் பொருட்டு இடைத்தரகர்களாக ஈடபடுத்திக்கொண்டார்கள். பிற்காலத்தில் அவர்களைத் தோல்க என்று அழைக்கப்பட்டனர்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தின் ஆரம்ப காலகட்டத்தில் உள்நாட்டு மொழி தொடர்பான தேர்ச்சி கட்டாயப்படுத்தியிருப்பினும், அது தொடர்பாக சட்டங்கள் விதிக்கப்படவில்லை. 1870 ஆம் ஆண்டில் சிவில் சேவை பரீட்சை அறிமுகப்படுத்திய பின்னர் சிங்களம் அல்லது தமிழ் மொழி தேர்ச்சி அறிமுகப்படுத்தயிதன் பின்னர் சிங்களம் அல்லது தமிழ் மொழித் தேர்ச்சி இல்லாத எந்தவொரு அலுவலரையும் உயர் பதவிக்கு தரமுயர்த்தப்படாமல் இருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. ஆகையால் அத்தகைய அலுவலர்களின் பொருட்டு சிங்களம் மற்றும் தமிழ் மொழி கற்பதற்கு அரசாங்கத்தால் வசதிகள் அளிக்கப்பட்டன.

1931 ஆம் ஆண்டில் டொனமோர் அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் நடைமுறைப்பட்டதுடன், அதன் விளைவாக தாய் மொழி கற்றவர்கள் மட்டுமல்ல அரசியல் தலைவர்களும் தாய்மொழி மீது ஆர்வம் காட்டுவதற்கு தூண்டப்பட்டனர். ஆங்கிலத்திற்குப் பதிலாக சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளைப் பயன்படுத்துவதற்கு அரச சபையில முன்மாழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டன. அதன்படி 1943 ஆம் ஆண்டில் அரச சபையில் உறுப்பினராக ஜே.ஆர்.ஜயவர்தன அவர்களால் சிங்களம் அரசகரும மொழியாக்குவதற்கான முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டது. அதில் தமிழ் மொழியும் உள்ளடக்கப்படுதல் வேண்டுமென்று பல்வேறு முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டதால் அதற்கான திருத்தங்களுடன் 1944 ஆம் ஆண்டில் குறித்த முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டு அதனைச் சபையில் நிறைவேற்றப்பட்டது. அதன் பின்னர் அதற்கான பணிகளை மேற்கொள்வதற்காக 1945 ஆம் ஆண்டில் ஜே.ஆர்.ஜயவர்தன அவர்களின் தலைமைத்துவத்தில் அரசகரும மொழிகள் செயற்குழு நியமனம் செய்யப்பட்டது. குறித்த செயற்குழுவின் அறிக்கைகள் மூலம் சிங்களம் மற்றும் தமிழ் அரசகரும மொழியாக்குவதன் முக்கியத்துவம் வலியுறுத்தியபோதும் அதனை அமுல்படுத்தப்படவில்லை.

## *3. பிரித்தானியா காலனித்துவ காலப் பகுதியின் பின்னர் இலங்கையின் மொழி பயன்பாடு*

1948 ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து சுதந்திரம் அடைந்த பின்னர் இலங்கையின் மொழிக் கொள்கையில் சில சீர்திருத்தங்கள் நிகழ்ந்ததுடன், அவற்றைப் பின்வருமாறு அடையாளம் காணலாம்.

- 1956 ஆம் ஆண்டு 33 ஆம் இலக்க அரசகரும மொழிகள் சட்டம்
- 1957 ஆம் ஆண்டு பண்டாரநாயக்க – செல்வநாயகம் உடன்படிக்கை
- 1958 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
- 1965 ஆம் ஆண்டு சேனாநாயக்க – செல்வநாயகம் உடன்படிக்கை
- 1966 ஆம் ஆண்டு தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) ஒழுங்குவிதிகள்
- 1972 ஆம் ஆண்டு இலங்கை அரசியலமைப்பு
- 1978 ஆம் ஆண்டு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு
- 1987 ஆம் ஆண்டு பதின்மூன்றாவது அரசியலமைப்பு திருத்தம்
- 1988 ஆம் ஆண்டு பதினாறாவது அரசியலமைப்பு திருத்தம்

1956 ஆம் ஆண்டு 33 ஆம் இலக்க அரசகரும மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்துவதன் மூலம் அரசியல், கலாச்சார, இனம் மற்றும் மொழி என்ற வகையில் பல பிரச்சினைகள் எழுந்தன. ‘‘சிங்களம் மட்டும்’’ என்ற அரசாங்கத்தின் கொள்கை காரணமாக இந்த நாட்டில் சிறுபான்மையினர்

பாதிக்கப்பட்டதுடன், இதுவே பிற்காலத்தில் ஏற்பட்ட போர் மோதல்களுக்கு காரணங்களாக அமைந்தது.

சிங்களம் மட்டும் அரசகரும மொழியாக செயற்பட்டதன் காரணமாக, சிங்களம் பேசாத மக்கள் மட்டுமல்ல சிங்களம் பேசுகின்ற மக்களும் பல்வேறு சிக்கலான நிலைமைகளை எதிர் நோக்கினார்கள். இந்தச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதன் மூலம் அனைத்து அரச அலுவலகங்களிலும் சிங்கள மொழியல் மட்டும் பணிகளை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டதுடன், அவ்வாறு பணியாற்றுவதற்கு இயலாத அலுவலர்கள் பொருட்டு ஓய்வுபெறுவதற்கான மாற்று வழிமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும் புதிதாக அரசாங்க சேவையில் இணைகின்ற சிங்கள மொழி பேசாத அலுவலர்களிடம், சேவையில் நிரந்தரப்படுத்துவதற்கு முன்னர் சிங்கள மொழி தேர்ச்சி பெற்றுக்கொள்ள வேண்டுமென விதிக்கப்பட்டது. ஆகையால் ஆங்கில மொழி கற்ற பெரும்பாலான தமிழ் அரசாங்க ஊழியர்கள் சேவையிலிருந்து வெளியேறியதுடன், சிங்களம் கற்க விரும்பாத தமிழ் மொழி பேசுபவர்கள் அரசு சேவையில் இணைதல் என்பது வரையறைக்குட்பட்டது. இந்தச் சட்டத்தை நன்றாக செயற்படுத்தும் பொருட்டு 1956 ஆம் ஆண்டில் அரசகரும மொழிகள் திணைக்களம் தாபிக்கப்பட்டதுடன், அதன் பிரதான பணிகள் பின்வருமாறாகும்.

- அரசாங்கத்திற்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் மொழிபெயர்ப்புகளை வழங்குதல்.
- கலைசொற் அகராதிகளை தயாரித்தல்.
- ஆங்கில மொழிகளில் காணப்படும் நூல்களை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளுக்கு மொழிபெயர்ப்புச் செய்தல் மற்றும்
- அரசாங்க அலுவலர்களுக்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி கற்பித்தல்.

1956 ஆம் ஆண்டு அரசகரும மொழிகள் சட்டம் நடைமுறைப்பட்டதால் நாட்டில் ஏற்பட்ட அமைதியின்மைக்கு நிவாரணம் அளிக்கும் வகையில், அப்போது பிரதமர் பதவி வகித்த திரு. எஸ்.டப்ளியு.ஆர்.டீ.பண்டாரநாயக்க அவர்கள் மற்றும் பெட்ரல் (Federal) கட்சியின் தலைமைத்துவம் வகித்த திரு.எஸ்.ஜே.வீ.செல்வநாயகம் ஆகியோருக்கிடையில் நடந்த கலந்துரையாடலின் பின்னர் எட்டப்பட்ட இணக்கப்பாடுகள் 1957 ஆம் ஆண்டு பண்டாரநாயக்க – செல்வநாயகம் உடன்படிக்கையில் குறிப்பிடப்படுகின்றன. அதன்போது அரசகரும மொழியின் நிலைக்கு சாதகமற்ற நிலை ஏற்படாத வகையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிருவாக மொழியாக தமிழ் மொழி பயன்படுத்துவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

அதன் பின்னர் 1958 இல் தமிழ் மொழி (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம் கொண்டு வரப்பட்டது. அந்தச் சட்டம் 1956 ஆம் ஆண்டு சட்டத்துடன் முரண்படாமல் இலங்கையில் தமிழ் மொழி பயன்பாட்டுக்கான ஏற்பாடுகள் அளிக்கப்பட்டன. அதன்மூலம் தமிழ் மொழி கற்கும் ஊடகமாகவும், அரச சேவைக்கான

ஆட்சேர்ப்புச் செய்கையில் பரீட்சைகளை நடாத்தும் ஊடகமாகவும், வடக்கு, கிழக்கு மற்றும் ஏனைய மாகாணங்களிலும், உள்ளூராட்சி நிறுவனங்களில் தமிழ் மொழியில் கல்வி கற்ற எந்தவொரு பதவி அந்தஸ்துள்ள நபருக்கும் அதற்கு சமமான பதவி அந்தஸ்துள்ள நபருக்கும் இடையில் தொடர்பு கொள்வதற்காக தமிழ் மொழி பயன்படுத்துவதற்கும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிர்வாகப் பணிகளில் தமிழைப் பயன்படுத்துவதற்கும் வழிவகை செய்யப்பட்டது.

1965 ஆம் ஆண்டில் திரு.டட்லி சேனாநாயக்க திரு.செல்வநாயகம் ஆகியோருக்கிடையில் உடன்படிக்கை ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது. அதன்போது வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிருவாக மற்றும் அறிக்கையிடும் மொழியாக தமிழ் மொழி பயன்படுத்தவதற்கு தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் துரிதமான நடவடிக்கை மேற்கொள்வதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது. வடக்கு கிழக்கு மாகாணங்களில் சட்டத்துடனான நடவடிக்கைகளைத் தமிழ் மொழியில் மேற்கொள்ளுதல் மற்றும் அறிக்கையிடல் என்பவற்றுக்கு மொழி ஏற்பாடுகளைச் செய்யும் பொருட்டு நீதித்துறை சட்டம் திருத்தம் செய்வதற்கும் இணக்கம் தெரிவிக்கப்பட்டது. அதற்காக 1966 ஆம் ஆண்டில் தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) ஒழுங்குவிதிகள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், 1956 ஆம் ஆண்டு 33 ஆம் இலக்க அரசகரும மொழிகள் சட்டத்தின்படி சிங்கள மொழி அரசகரும மொழியாக உள்ளதுடன், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிருவாக நடவடிக்கைகள் மற்றும் அறிக்கைகளைப் பராமரிப்பதற்கு அரச நிறுவனங்கள் தமிழ் மொழி பயன்படுத்த வேண்டுமெனவும், தமிழ் மொழியில் கல்விகற்ற அலுவலர் ஒருவர் உள்ளூராட்சி நிறுவனமொன்றில் அத்தகைய பதவி வகிக்கும் எவரேனும் ஒரு அலுவலருடன் உத்தியோகபூர்வ நடவடிக்கைகளின் பொருட்டு தமிழ் மொழி பயன்படுத்த வேண்டுமெனவும், 1958 ஆம் ஆண்டு தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் பயனுள்ள வகையில் செயற்படுத்தும் நடவடிக்கையாக அனைத்து கட்டளைகள், சட்டங்கள், அரசாங்கத்தின் வர்த்தமானி பத்திரங்கள், அரசாங்கத்தின் கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களில் அனைத்து வெளியீடுகளையும் தமிழ் மொழியில் மொழிபெயர்ப்பதற்கும், ஒழுங்குவிதிகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

1972 ஆம் ஆண்டில் முதலாவது உள்நாட்டு அரசியலமைப்பு அறிமுகப்படுத்தியதுடன், அதன்மூலம் தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் கைவிடப்பட்டது. அதில் மொழி தொடர்பான மூன்றாவது அத்தியாயத்தில் சிங்கள மொழி அரசகரும மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நியாயமான காரணங்கள் மீது தமிழ் மொழி பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. சட்டம் விதிக்கும் மொழி சிங்கள மொழியாவதுடன், அவ்வாறு விதிக்கப்படும் ஒவ்வொரு சட்டமும், ஒவ்வொரு துணைச்சட்டத்தினதும் தமிழ் மொழிபெயர்ப்பு வழங்குவதற்கு ஏற்பாடுகள் அளிக்கப்பட்டன.

## *4. தற்கால இலங்கையின் அரசகரும மொழிக் கொள்கை*

1978 ஆம் ஆண்டில் இலங்கையில் இரண்டாவது அரசியலமைப்பு சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு அதன்போது வெளியிடப்பட்டதுடன், அதன் III அத்தியாயத்தில் மொழி அடிப்படை உரிமையாக குறிப்பிடப்படுவதுடன், எந்தவொரு நபரையும் மொழி அடிப்படையாகக்கொண்டு வேறுபாடுகளுக்கு அல்லது சிறப்புகளுக்கு உட்படுத்தலாகாது என்று காண்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் அதன் IV ஆவது அத்தியாயத்தில் மொழி தொடர்பான அடிப்படை சட்டம் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அதன் ஏற்பாடுகள் 1987 ஆம் ஆண்டில் 13 ஆவது அரசியலமைப்பு திருத்தங்கள் மற்றும் 1988 ஆம் ஆண்டில் 16 ஆவது அரசியலமைப்பு திருத்தங்கள் என்பவற்றால் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. 13 ஆவது திருத்தம் மூலம் திருத்தம் செய்யப்பட்ட 18 (1) மற்றும் 18 (2) திருத்தங்கள் பிரகாரம், சிங்களம் மற்றும் தமிழ் இலங்கையில் அரசகரும மொழிகளாவதுடன், 18 (3) உறுப்புரையில் ஆங்கில மொழி இணைப்பு மொழியாக காண்பிக்கப்பட்டுள்ளது. 16 ஆவது திருத்தம் மூலம் திருத்தம் செய்யப்பட்ட 20 ஆவது உறுப்புரை பிரகாரம், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அல்லது மாகாண சபையின் அல்லது உள்ளூரதிகார சபையின் உறுப்பினர் ஒருவர், பாராளுமன்றத்திலோ அத்தகைய மாகாண சபையிலோ அல்லது உள்ளூரதிகார சபையிலோ எந்தவொரு தேசிய மொழியிலும் தமது கடமைகளைப் புரியவும் பணிகளை நிறைவேற்றவும் உரித்துடையவராதல் வேண்டும். உள்ளூராட்சி நிறுவனத்தில் தேசிய மொழிகள் இரண்டில் எந்தவொரு மொழியிலேனும், தமது அலுவல்களையும் பணிகளையும் நிறைவேற்றுவதற்கு உரிமை உள்ளது என்பதைக் குறிப்பிடப்பட்டுள்ளது.

1978 ஆவது அரசியலமைப்பில் 19 ஆவது உறுப்புரை பிரகாரம் சிங்கள மொழி மற்றும் தமிழ் மொழி இலங்கையில் தேசிய மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அரசியலமைப்பில் 21 ஆவது உறுப்புரை மூலம் கற்பிக்கும் ஊடகம் தொடர்பான ஏற்பாடுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அதன்படி,

21(1) உறுப்புரை: ஆள் ஒருவர் எந்தவொரு தேசிய மொழியிலும் கல்வி கற்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும். உறுப்புரை:

ஆயின், தேசிய மொழியல்லாத ஒரு மொழியைக் கல்வி மொழியாகக் கொண்டிருக்கின்ற ஓர் உயர்கல்வி நிறுவனத்திற்கு இப்பந்தியின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலாகாது.

21(2) ஆவது உறுப்புரை: அரசினால் நேரடியாகவோ நேரடியில்லாமலோ நிதியளிக்கப்படும் ஏதேனும் பல்கலைக்கழகத்தின் ஏதேனும் கற்கைநெறியில் அல்லது பகுதியில் அல்லது துறையில், ஒரு தேசிய மொழியே கல்வி மொழியாக இருக்கின்ற விடத்து, அத்தகைய பல்கலைக்கழகத்தில்

சேருவதற்கு முன்னர் மற்றத் தேசிய மொழியில் கல்வி கற்றுவந்த மாணவர்களுக்கு அத்தகைய கற்கைநெறியில், பகுதியில் அல்லது துறையில், அந்த மற்றத் தேசிய மொழியையும் கல்வி மொழியாக ஆக்குதல் வேண்டும்.

16 ஆவது திருத்தம் மூலம் திருத்தம் செய்யப்பட்ட 22 (1) உறுப்புரை பிரகாரம், சிங்களம் மற்றும் தமிழ் இலங்கை முழுவதும் நிருவாக மொழியாகும். அரசாங்க நிறுவனங்களால் பொது அறிக்கைகளைப் பராமரித்தல் மற்றும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் தமிழ் மொழி பயன்படுத்துகின்ற வடக்கு கிழக்கு மாகாணங்களைத் தவிர, இலங்கையில் அனைத்து மாகாணங்களில் நிருவாக மொழி சிங்களம் ஆகும். 23 ஆவது உறுப்புரை பிரகாரம் அனைத்து சட்டங்கள் மற்றும் துணைச்சட்டங்கள் விதிக்கும் மொழி சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் இருத்தல் வேண்டுமென்பதுடன், அதன் ஆங்கில மொழிபெயர்ப்பு இருத்தல் வேண்டும். உறுப்புரை பிரகாரம், இலங்கை முழுவதும் நீதித் துறையில் மொழி சிங்களம் மற்றும் தமிழ் மொழியாதல் வேண்டுமென்பதுடன், வழக்கு அறிக்கைகள் மற்றும் வழக்கு நடவடிக்கைகள் அரசகரும மொழியாதல் வேண்டும். அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், மொழி பயன்பாட்டுக்காக அரசு போதியளவு வசதிகளை வழங்குதல் வேண்டுமென அதில் 25 ஆவது உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் மொழி தொடர்பான அடிப்படை சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக, முக்கியமான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன.

**(1) இருமொழி பிரதேச செயலகப் பிரிவுகளை பெயரிடல்**

தற்போது 41 இருமொழி பிரதேச செயலகப் பிரிவுகள் வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டுள்ளதுடன், மேலும் 31 ஐ வெளியிடப்படவுள்ளது.

**(2) பொது நிருவாக சுற்றறிக்கைகள் மற்றும் சுற்றிக்கை கடிதங்களை வெளியிடல்.**

அரச கரும மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் பொது நிருவாக அமைச்சு மூலம் அவ்வப்போது சுற்றறிக்கை மற்றும் சுற்றறிக்கை கடிதங்கள் வெளியிடப்பட்டுள்ளதுடன், அவற்றின் சில பின்வருமாறாகும்.

- பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 12/2003- மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்பு
- பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 03/2010 - நிறுவனங்களால் கடிதங்களை பரிமாற்றுகையில் பின்பற்றப்பட வேண்டிய ஏற்பாடுகள்
- பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 18/2009 – அரச மொழி கொள்கை நடைமுறைப்படுத்தும் பொறுப்பை ஒப்படைத்தல்

மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்துவதற்காக நிறுவனத் தலைவர்களுக்கு இதன்மூலம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், 1620 ஆம் இலக்க 2009.09.25 ஆம் திகதிய வர்த்தமானி அறிவிப்பும் வெளியிடப்பட்டுள்ளது.

- அரச /மாகாண அரச அலுவலர்கள் மற்றும் பகுதி அளவிலான அரச நிறுவனங்களின் அலுவலர்களது மொழி தேர்ச்சி தொடர்பில் வழங்கியுள்ள சுற்றறிக்கைகள்

இது தொடர்பில் அவ்வப்போது பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கங்கள் 07/2007 , 3/2007, 1/2014 மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கைகள் 4/2014 வெளியிடப்பட்டுள்ளதுடன், அதன்மூலம் 2007 ஆம் ஆண்டின் பின்னர் அரசு /மாகாண அரச சேவையில் இணைந்துக்கொண்ட அலுவலர்களும், 2013 ஆம் ஆண்டின் பின்னர் சேவையில் இணைந்துக்கொண்ட பகுதிநேர அரச நிறுவனங்களின் அலுவலர்களுக்கும், ஏனைய அரச மொழி தேர்ச்சி பெற்றுக்கொள்வதற்காக எழுத்திலான மற்றும் வாய்மொழிமூலமான பரீட்சை கட்டாயப்படுத்தப்பட்டது. தற்போது குறித்த சுற்றறிக்கைகள் இரத்துச் செய்யப்பட்டு அதற்குப் பதிலாக பொது நிருவாக சுற்றறிக்கை 18/2020 மற்றும் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 1/2023 வெளியிடப்பட்டுள்ளது. 2007 ஆம் ஆண்டின் பின்னர் அரசு /மாகாண பொது சேவைக்கு சேர்ந்த எல்லா அலுவலர்களுக்கும் 2013 ஆம் ஆண்டின் பின்னர் சேவைக்கு சேர்ந்த பகுதி அளவிலான அரச நிறுவனங்களின் அலுவலர்களுக்கும் மற்றைய அரசகரும மொழிகள் தொடர்பான கற்கைநெறி கற்று தமது மொழி தேர்ச்சியை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

- பொது நிருவாக சுற்றறிக்கை 12/2003: அனைத்து அரச நிறுவனங்களில் படிவங்கள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் இருத்தல் வேண்டும்.
- பொது நிருவாக சுற்றறிக்கை 22/91 : அரச மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு நிறுவனங்களிடம் ஒப்படைத்தல்

  - அரசகரும மொழிகள் திணைக்களம் மற்றும் அரசகரும மொழிகள் ஆணைக்குழு

பிற்காலத்தில் அரசகரும மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்புடையதாக மொழிப் பயிற்சி நிறுவனமாக 2007 ஆம் ஆண்டில் தேசிய மொழிக் கற்கை மற்றும் பயிற்சி நிறுவனம் தாபிக்கப்பட்டது.

➢ ***அரசகரும மொழிகள் திணைக்களம்***

1956 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது. அரச /மாகாண அரச அலுவலர்களதும் பகுதி அளவிலான அரச நிறுவனங்களினதும் அலுவலர்களின் மொழி தேர்ச்சி மற்றும் பயிற்சி கற்கைநெறிகளை நடாத்தல், அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ மொழிபெயர்ப்பாளராக அரசாங்கத்திடம் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் மொழிபெயர்ப்புகளை வழங்குதல், கலைசொற் அகராதி தயாரித்தல், மற்றும் மொழிக் கற்கை கருவிகளை தயாரித்தல் இதன் முக்கியமான கடமைப்பொறுப்புகளாகும்.

➢ ***அரசகரும மொழிகள் ஆணைக்குழு***

அரசகரும மொழிகள் ஆணைக்குழு 1991 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டதுடன், அதன் கடமைப்பொறுப்புகள் பிரதானமாக நான்கு நோக்கங்களைக் கொண்டுள்ளது.

- **புலனாய்வு** - இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள மொழி உரிமைகளை மீறுதல் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்தல்.

- மேற்பார்வை – அரசகரும மொழிகள் பயன்பாடு தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் ஏற்பாடுகள், அரச பொறிமுறையால் உரிய வகையில் பின்பற்றப்படுகின்றதா என்பது தொடர்பாக விழிப்புணர்வுடன் செயற்படல்.

- **கல்வி**- உரிய மொழிகளில் அந்தஸ்த்து அல்லது பயன்பாடு தொடர்பாக உரிய தரப்புகளை அறிவுறுத்தல்.

- ஆலோசனை – கொள்கை முறையிலான கோட்பாடுகளை வகுப்பதற்கு தேவையான ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அரசாங்கத்திடம் முன்வைத்தல்

➢ ***தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்***

2007 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட இந்த நிறுவனத்தின் முக்கியமான நோக்கங்கள் எவையெனில், சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழி கற்பிப்பதற்கு பொருத்தமான, திறமையுடன் கூடிய ஆசிரியர்களை உருவாக்குதல், மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் உரைப்பெயர்ப்பாளர்களை உருவாக்குதல், மும்மொழி ஆற்றல் உள்ள அலுவலர்களை பயிற்றுவித்தல் என்பனவாகும்.

**(3) சனாதிபதி அவர்களால் வெளியிடப்பட்ட கடிதம்**

1997 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆம் திகதி அப்போதைய கௌரவ சனாதிபதி அவர்களால் அனைத்து அமைச்சர்கள், செயலாளர்கள் மற்றும் நிறுவனத் தலைவர்கள் ஆகியோரிடம் “ அரச கரும மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்தல்” என்ற தலைப்பில் கடிதம் வெளியிடப்பட்டது. அரச நிறுவனங்களில் அனைத்து ஒழுங்குவிதிகள், சட்டத்துடனான ஏற்பாடுகள், தகவல்கள் மற்றும் படிவங்கள் மும்மொழியிலும் இருத்தல் வேண்டுமெனவும், அரசாங்க நிறுவனத்திடம் கிடைக்கப்பெறுகின்ற கடிதமொன்றுக்கு குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழியிலயே பதில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டுமெனவும், அனைத்து அரச நிறுவனங்களில் பெயர் பலகைகள், வழிகாட்டுதல் பலகைகள் உள்ளிட்ட ஏனைய ஆலோசனைகள் மும்மொழியிலும் இருத்தல் வேண்டுமெனவும், சிங்களம்-தமிழ் மொழிபெயர்ப்பாளர்களின் பதவி வெற்றிடங்களை விரைவாக நிரப்புதல் வேண்டுமெனவும், மொழி தொடர்பான உரிய சட்டம் நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப்பை ஒப்படைப்பதற்கு ஒவ்வொரு நிறுவனத்திலும் சிரேட்ட அலுவலர் ஒருவரை அடையாளம் காணப்படல் வேண்டுமெனவும் குறித்த கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

**(4) அமைச்சரவை தீர்மானங்கள்**

சிங்கள மொழி கூற்றுகளை மட்டும் பயன்படுத்திய அரசாங்கத்தின் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் பொருட்டு தமிழ் மொழி கூற்றுகளையும் பயன்படுத்தல் வேண்டும். அரசாங்க நிறுவனங்களின் பொருட்டு இதற்காக அரகரும மொழிகள் திணைக்களத்தின் ஒத்துழைப்பு வழங்கப்படுதல் வேண்டும். (2018/04/19 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானம்)

ஒவ்வொரு ஆண்டும் யூலை மாதம் 01 ஆம் திகதி அரச மொழி தினமாகவும், யூலை 1 ஆம் திகதி தொடக்கம் யூலை 5 ஆம் திகதி வரை அரச மொழி வாரமாகவும் பெயரிடல் ((2009/05/31 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானம்)

**(5) 1956 மொழி அழைப்பு நிலையம் தாபித்தல்**

இதன் ஊடாக மொழி உரிமைகள் மீறுதல் தொடர்பில் முறைப்பாடுகளை செய்வதற்கான ஆற்றல் உண்டு.

**(6) சர்வதேச உடன்படிக்கைகள்**

இலங்கை சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பில் சர்வதேச பட்டயத்திற்கமைவாக 1980 இல் இணக்கப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

## *(5) மொழி உரிமைகள் மீறுதல் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.*

மொழியை அடிப்படை உரிமையாக அரசியலமைப்பில் ஏற்றுக்கொண்டுள்ளபடியால், மொழி உரிமைகள் மீறினால் பின்வரும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

- அரசகரும மொழிகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்தல்
- உச்ச நீதிமன்றத்தில் சலுகை பெற்றுக்கொள்ளுதல்
- உயர் நீதிமன்றத்தில் சலுகை பெற்றுக்கொள்ளுதல்
- நீதவான் நீதிமன்றத்தில் நிவாரணம் பெற்றுக்கொள்ளுதல்.
- மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்தல்
- பொது முறைப்பாட்டு செயற்குழுவிடம் முறைப்பாடு செய்தல்
- ஒம்புட்ஸ்மன் அவர்களிடமிருந்து நிவாரணம் பெறுதல்.

இதன்படி அரசகரும மொழிக் கொள்கை நன்றாக செயற்படுத்தும் பொருட்டு அவ்வப்போது பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளமை தெளிவாகின்றது. மக்களிடத்தில் அமைதியும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தும் வகையில் அரசகரும மொழிக் கொள்கை சிறப்பாக செயற்படல் வேண்டுமென்பதுடன், அதற்கு தேசிய திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். அரசகரும மொழிக் கொள்கை சிறப்பாக செயற்படுகின்றபோது ‘‘ஒரே நாடு ஒரே மக்கள்’’ என்பதை யதார்த்தமாக்கிக் கொள்வதற்கு முடியுமாகும்.

***சார்பு நூல்கள் மற்றும் ஆவணங்கள்***


கோப்பரஹேவா சந்தகொமி, அரசகரும மொழிகள் திணைக்களத்தின் வரலாறு மற்றும் பயணம் - அரசகரும மொழி கொள்கை மற்றும் அதனைச் சார்ந்த சட்டம் - தேசிய மொழி மற்றும் சமூக ஒருமைப்பாடு அமைச்சு

அரசகரும மொழி கொள்கை- வழிகாட்டல் கோவை – அரசகரும மொழிகள் ஆணைக்குழு

ஸ்கந்தகுமார், பி, இலங்கையில் மொழி உரிமைகள் - தமிழ் மொழி அரசகரும மொழியாக அமுல்படுத்தல்.

Coperahewa, Sandagomi “Colonialism and problems of language policy: formulation of a colonial language policy in Sri Lanka”

Gunasena, Senarath “ Language Policy：An Overview of the Sri Lankan experience”



***சனோஜி ருவினிகா பெரேரா***
***ஆணையாளர்***